ஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

27 04 2025 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

2. தீவிரவாதத்திற்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியம் என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா கூறியுள்ளார்.

3. 2029ஆம் ஆண்டுக்குள் ஆந்திராவில் இருந்து வறுமையை முற்றிலுமாக ஒழிப்பதற்கு தமது அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

4. ஈரான் துறைமுகத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 14ஆக அதிகரித்துள்ளது. 750க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

5. துனீஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manush Sha – Diya Chitale** இணை பட்டம் வென்றது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

இது 121வது மன் கி பாத் நிகழ்ச்சியாகும்.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்தியா வானொலி ஒலிபரப்பு செய்கிறது.

இது இரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்பட உள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<>>>>

தீவிரவாதத்திற்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியம் என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா கூறியுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் **Bundi**–யில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர். பஹல்காமில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் சம்பவத்தால் நாடே பெரும் துயரத்தில் உள்ளதாக கூறினார்.

தீவிரவாதம் எந்த வடிவத்தில் வந்தாலும் அது ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு தீவிரவாதத்திற்கு எதிராக எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு விரைவில் நல்ல விளைவுகள் தெரியவரும் என்றும் அவர் தெரிவித்தார்.

பஹல்காம் தாக்குதல் சம்பவத்திற்கு பிறகு ஒட்டுமொத்த தேசம் தீவிரவாதத்திற்கு எதிரான உறுதிப்பாட்டை ஒற்றுமையுடன் வெளிப்படுத்தியதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

பஹல்காம் பகுதியில் பாதுகாப்பு குறைபாடு இருந்ததை மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளதாக காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன் கார்கே கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர். மத்திய அரசு கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடியும் பங்கேற்றிருக்க வேண்டும் என்று கூறினார்.

பஹல்காமில் பாதுகாப்பு குறைபாடு இருந்ததை இந்தக் கூட்டத்தில் உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்தார் என்றும், இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருக்க உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று அவர் உறுதியளித்ததாகவும் திரு. கார்கே தெரிவித்தார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டத்தை கூட்டுவதற்கு துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா அனுமதி அளித்துள்ளார்.

மாநில அமைச்சரவையின் வேண்டுகோளை அடுத்து இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், நாளை இந்த சிறப்புக் கூட்டம் நடைபெறும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவம் தொடர்பாக விவாதிக்க இந்தக் கூட்டம் நடைபெறுவதாக ஆளுநர் மாளிகை செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தோருக்கு கூட்டத்தில் அஞ்சலி செலுத்தப்படும் என்றும், பின்னர் விரிவான விவாதம் நடத்தப்படும் என்றும் மாநில அரசு கூறியுள்ளது.

<<<<>>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதலைக் கண்டித்து மும்பை சத்ரபதி சிவாஜி மஹராஜ் சதுக்கத்தில் நேற்று மாலை ஏராளமான இஸ்லாமியர்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பேசிய திரு. இக்பால் ஷேக் மற்றும் சமீர் பகுவான் ஆகிய இஸ்லாமிய தலைவர்கள், இஸ்லாம் மதத்தில் பயங்கரவாதத்திற்கு இடமில்லை என்று கூறினர்.

வன்முறைக்கு எதிராக மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும் என்றும் அவர்கள் அழைப்பு விடுத்தனர்.

பயங்கரவாதத்திற்கு எதிராக முழக்கமிட்ட இவர்கள், அமைதியும், சகோதரத்துவமும் செழிப்பதற்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு பயங்கரவாதத்தை எதிர்க்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர்.

<<<<>>>>

குஜராத் மாநிலத்தில் சட்டவிரோதமாக தங்கியுள்ள பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்தவர்களை அடையாளம் கண்டு வெளியேற்றும் நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளதாக அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

முதலமைச்சர் திரு. பூபேந்திர பட்டேல், மாநில உள்துறை அமைச்சர் திரு. **Harsh Sanghavi** ஆகியோரின் வழிகாட்டுதலில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில காவல்துறை தலைமை இயக்குநர் திரு. விகாஸ் சகாய் கூறினார்.

போலியான ஆவணங்களை தாக்கல் செய்து குஜராத் மாநிலத்திற்குள் நுழைந்துள்ள பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்தவர்கள் குற்றச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனரா என்பது குறித்தும் விசாரிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

2029ஆம் ஆண்டுக்குள் ஆந்திராவில் இருந்து வறுமையை முற்றிலுமாக ஒழிப்பதற்கு தமது அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் நலத்திட்டங்களால் பயனடைந்தவர்கள் இதுவரை பயனடையாதவர்களுக்கு ஆதரவு அளிக்க முன்வர வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நேற்று ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் மீனவர்களுக்கான நலத்திட்டங்களை தொடங்கி வைத்துப் பேசிய அவர், மாநிலத்தில் உள்ள ஏழை மற்றும் நடுத்தர மக்களை பொருளாதார ரீதியாக படிப்படியாக மேம்படுத்த அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாகக் கூறினார்.

பொருளாதார ரீதியாக வளமாக இருப்பவர்கள் ஏழைக் குடும்பங்களுக்கு தங்களால் முடிந்தவரை உதவ வேண்டும் என்றும், இதன் மூலமே சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகளைப் போக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக திரு. சந்திரபாபு நாயுடு, நலத்திட்டங்கள் தொடர்பாக மீனவர்களுடன் கலந்துரையாடினார்.

<<<<>>>>

உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் இன்று கங்கா அதிவிரைவுச் சாலையின் கட்டுமானப் பணிகளை நேரில் ஆய்வு செய்ய உள்ளார்.

உத்தரப்பிரதேச மாநில வரலாற்றில் மிகப்பெரிய கட்டமைப்பு திட்டங்களில் ஒன்றாக இந்தச் சாலை திட்டம் அமைந்துள்ளது.

இந்த திட்டத்தை விரைந்து முடிப்பதற்கு மாநில அரசு அதிக முன்னுரிமை அளித்து வருகிறது.

இந்த சாலை கட்டுமான பணிகள் தொடர்பாக **Hardoi, Shajahanpur, Hapur** ஆகிய மூன்று மாவட்டங்களில் அவர் ஆய்வு செய்ய உள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

இந்த அதிவிரைவுச் சாலையை உத்தரப்பிரதேச அதிவிரைவுச் சாலை தொழில் மேம்பாட்டு ஆணையம் அமைத்து வருகிறது.

இந்த சாலை அம்மாநிலத்தின் மேற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளை இணைக்கும் வகையில் அமைக்கப்பட்டு வருகிறது.

மீரட்டில் இருந்து தொடங்கும் இந்த சாலை, பிரயாக்ராஜ் வரை சுமார் 600 கிலோ மீட்டர் தூரத்திற்கு அமைக்கப்படுகிறது.

<<<<>>>>

தெற்கு ஈரானின் **Bandar Abbas** அருகே உள்ள **Shahid Rajaee** துறைமுகத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 14ஆக அதிகரித்துள்ளது. 750க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து வேதனை தெரிவித்துள்ள ஈரான் அதிபர் திரு. **Masoud Pezeshkian** உயிரிழந்தோர் குடும்பத்திற்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதாக கூறியுள்ளார்.

இந்த வெடிவிபத்துக்கான காரணம் குறித்து ஈரான் உள்துறை அமைச்சகத்தின் சிறப்பு பிரதிநிதி, சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணை மேற்கொண்டு அரசுக்கு அறிக்கை அளிப்பார் என்று தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க மருத்துவமனைகளுக்கு அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வெடிவிபத்தால் துறைமுக வளாகத்தில் உள்ள ஈரான் தேசிய பெட்ரோலிய சுத்திகரிப்பு மற்றும் வினியோக நிறுவனத்திற்குச் சொந்தமான எண்ணெய் சேமிப்பு கிடங்குகளுக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

அணுசக்தி தொடர்பாக ஈரான் மற்றும் அமெரிக்கா இடையிலான பேச்சுவார்த்தை மஸ்கட்டில் நேற்று நிறைவடைந்தது.

இந்தப் பேச்சுவார்த்தையை அடுத்த வாரம் மீண்டும் தொடர்வது என்று இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

ஈரான் அணுசக்தி திட்டம் தொடர்பாக பல ஆண்டுகளாக இரு நாடுகளுக்கிடையே பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

முன்பு நடைபெற்ற பேச்சுவார்த்தையைவிட தற்போதை சுற்றுப் பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாகவும், ஆழமான விவாதங்களை கொண்டதாகவும் அமைந்திருந்ததாக ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Abbas Araghchi** தெரிவித்தார்.

அணுசக்தி தொடர்பாக தொழில்நுட்ப விவரங்களை இருதரப்பினரும் தீவிரமாக விவாதித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் ஈரான் அணுசக்தி திட்டம் தொடர்பாக மிக விரைவில் அந்நாட்டுடன் ஒப்பந்தம் ஏற்படும் என்று அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தை மிகவும் திருப்திகரமாக இருந்ததாக இதில் கலந்துகொண்ட இரு நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

மிக விரைவில் ஐரோப்பாவில் சந்தித்துப் பேச இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<>>>>

துனீஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manush Sha – Diya Chitale** இணை பட்டம் வென்றது.

கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 11-9, 5-11, 14-12, 3-11, 11-6 என்ற செட் கணக்கில் ஜப்பானின் **Sora Matsushina – Miwa Harimoto** இணையை வென்றது.

<<<<>>>>

இந்தியா - இலங்கை – தென்னாப்பிரிக்கா அணிகள் மோதும் முத்தரப்பு ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டி கொழும்பில் தொடங்குகிறது.

முதல் போட்டியில் இந்தியா இன்று இலங்கையை எதிர்கொள்கிறது.

இப்போட்டி காலை 10 மணிக்கு தொடங்குகிறது.

இந்தியா, இலங்கை மற்றும் தென்னாப்பிரிக்காவுடன் தலா இரு ஆட்டங்களில் மோதுகிறது.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் - கொல்கத்தா அணிகளுக்கு இடையே நேற்று நடைபெற்ற ஆட்டத்தின் இடையே மழை குறுக்கிட்டதால் ஆட்டம் ரத்து செய்யப்பட்டது.

இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் மும்பை – லக்னோ அணியையும், தில்லி – பெங்களூரு அணியையும் எதிர்கொள்கின்றன.

**<<<<>>>>**

கலிங்கா சூப்பர் கோப்பை கால்பந்து அரையிறுதிப் போட்டிக்கு கோவா அணி முன்னேறியுள்ளது.

**<<<<The End>>>>**